செ.வெ.எண்.206 நாள்.12.05.2017

**பத்திரிக்கை செய்தி**

தேசிய சிறுவர் மன்றத்தின் 2016ஆம் ஆண்டிற்கான தேசிய பாலஸ்ரீ விருதிற்கான மாவட்ட அளவிலான (உள்ளூர் அளவிலான) மாவட்ட கலைப்போட்டிகள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

| S.No | MAIN STREAMS | | SUB STREAMS |
|---|---|---|---|
| I | Creative Performance (மேடைக்கலை) | a. | Percussion / Instrumental Music (தாளவாத்தியம் / கருவியிசை) |
| | | b. | Vocal Music ( குரலிசை) |
| | | c. | Dance ( நாட்டியம்) |
| | | d. | Theatre and Puppetry ( நாடகம் மற்றும் பொம்மலாட்டம்) |
| II | Creative Art (படைப்புக்கலை) | a. | Visual Arts ( Designing Graphics and Digital Art) (காட்சி தொடர்பு கலை – வரைகலை மற்றும் டிஜிட்டல் ஆர்ட்) |
| | | b. | Painting(ஓவியம்) |
| | | c. | Sculpture(சிற்பம்) |
| | | d. | Craft(கைவினை) |
| III | Creative Writing (எழுத்துக்கலை) | a. | Poem(கவிதை) |
| | | b. | Story(கதை) |
| | | c. | Prose(கட்டுரை) |
| | | d. | Dialogues and Play (உரையாடல் மற்றும் நாடக காட்சி எழுதுதல்) |
| IV | Creative Scientific Innovation (அறிவியல் கலை) | a. | Science Model Making (அறிவியல் மாதிரி உருவாக்கம்) |
| | | b. | Science Project(அறிவியல் செயல்முறை திட்டம்) |
| | | c. | Science Problem Solving (அறிவியல் புதிர்களுக்கு தீர்வு காணுதல்) |
| | | d. | Scientific Innovation (அறிவியலில் புதிய கண்டுபிடிப்புகள்) |
| | தகுதிகள்<br>வயது வரையரை<br>10 முதல் 16 வயது வரை<br>(01.04.2016–ன் படி) | | வயது பிரிவு<br>10+ – 12 வயது வகை<br>12+ – 14 வயது வகை<br>14+ – 16 வயது வகை |
| | போட்டியில் ஏற்கனவே கலந்து கொண்டவர்களுக்கு | | ஒவ்வொரு மாணவரும் இப்போட்டிகளில் இரண்டு முறை மட்டுமே பங்கேற்க வேண்டும். இரண்டாம் முறை பங்கேற்கும் போது அடுத்த வயது வகையில் பங்கேற்க வேண்டும். |

போட்டிகள் காஞ்சிபுரம் மாவட்ட அரசு இசைப்பள்ளி வளாகம், சதாவரம், (காது கேளாதோர் பள்ளி அருகில், 15.05.2017 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெறும்.

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பள்ளிகளிலிருந்து பிறந்த தேதி/ வயதிற்கான சான்றினை ( Bonafide Certifcate) எடுத்து வர வேண்டும். போட்டியில் கலந்துகொள்பவர்கள் அதற்கான பக்க வாத்தியங்களை/இசைக்கருவிகளை ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். அதேபோன்று எழுத்துக்கலை, படைப்புக்கலை மற்றும் அறிவியல் கலை ஆகியவற்றிற்கான தேவையான பொருட்களை (வெள்ளைத்தாள்கள், பேனா, பென்சில், ஓவியத்தாள், வண்ணங்கள், தூரிகைகள் உட்பட) தாங்களே எடுத்துவரவேண்டும். தலைப்புகள் போட்டி தொடங்கும்போது அறிவிக்கப்படும். ஒவ்வொரு துணைப் பிரிவிலும் ஒரு மாணவர் என 16 துணைப் பிரிவுகளில் 16 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விவரங்கள் தொலைபேசியில் தெரிவிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு–செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.